**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.420/2019 நாள்.10.09.2024**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ம் நாள் மனுதாரர் தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளையபெருமாள் | தொழில் | |
| த.பெ/க.பெ. | ஏழுமலை | சாதி | |
| கிராமம் | விழுப்புரம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 30 |

**ம.சா.1**

**குறுக்கு விசாரணை**

எனக்கு 30 வயதாகிறது. நான் மோட்டார் தொழில் செய்துவருகிறேன். போர்வெல் பழுதடைந்தால் அதனை சீர்செய்யும் பணி மற்றும் டைல்ஸ் பதிக்கும் வேலை செய்து வருகிறேன். மேற்படி தொழிலை 10 ஆண்டுகளாக செய்துவருகிறேன். எனக்கு 19 வயது இருக்கும்போதே செய்ய ஆரம்பித்துவிட்டேன். விபத்தின்போது நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிசென்றேன். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் என்ன என்றால் ஞாபகமில்லை. என் அண்ணன் ராஜா என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை ஓட்டிசென்றேன். அவர் எனது சித்தப்பா மகன் ஆவார். நான் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியாது. உங்களுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இருக்கிறது. நீங்கள் ஓட்டிசென்ற இருசக்கர வாகனத்தின் பதிவு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் இருசக்கர வாகனத்தை விபத்து ஏற்படும் சமயம் தலைக்கவசம் அணிந்திருந்தீர்களா என்றால் இல்லை. 08.07.2019ல் இரவு சுமார் 9.30 மணியளவில் காரையிலிருந்து ஒட்டம்பட்டுக்கு சென்றுகொண்டிருந்த போது காரைக்கும் ஒட்டம்பட்டுக்கும் வெளியே விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்ட இடத்தில் 2 வீடுகள் இருந்தது. அந்த இடத்தில் தெருவிளக்குகள் இருந்தன. எதிர்திசையில் வந்த இருசக்கர வாகனம் நான் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. அந்த வாகனத்தை ஓட்டிவந்தவர் யார் என்று எனக்கு தெரியாது. இதுவரை அந்த நபரை பற்றி நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். என்மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN16 X 3512 ஆகும். அந்த வாகனத்தின் பதிவெண் உங்களுக்கு எப்போது தெரியவந்தது

என்றால் விபத்து எற்பட்ட சமயத்தில் என்மீது மோதி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. பின்னிட்டு நீங்கள் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை முடித்துவந்த பிறகு பதிவெண் உங்களுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல நான் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது என் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை என் மாமா கன்னியப்பன் தெரிவித்தார். விபத்து ஏற்பட்டு எத்தனை நாட்களுக்கு பின்னிட்டு அரசு மருத்துவமனையில் சேர்ந்தீர்கள் என்றால் 10.07.2019ல் தான் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு சிகிச்சையில் சேர்ந்து 2,3 நாட்கள் கழித்துதான் வாகனத்தின் பதிவெண்ணை என்னிடம் சொன்னார். என்மீது மோதிய இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்று தெரியாது. என் மீது மோதியதாக கூறப்படும் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. விபத்தினால் எனக்கு நெற்றியில் அடிபட்டதற்கு தலையில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. மேல்தாடையில் 4 பற்கள் விழுந்துவிட்டது. அடிபட்டவுடனேயே செஞ்சி அரசு மருத்துவமனையில் சிசிச்சை பெற்று பின்னர் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் அங்கு முடியவில்லை என்று ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சேர்ந்து 27 நாட்களுக்கு சிசிக்சை அளிக்கப்பட்டது. நீங்கள் தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் அடிபடாமல் தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக என் தந்தை ஏழுமலை தான் புகார் அளித்தார். விபத்து ஏற்பட்டு சுமார் 9 நாட்கள் கழித்துதான் 17.07.2019 தேதியன்று தான் புகார் கொடுக்கப்பட்டது. இந்த விபத்தை என் தந்தை நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு அடிப்பட்டவுடன் சுயநினைவு இழந்துவிட்டேன். விபத்து எற்பட்ட இடத்தில் எதிரே வீட்டிலிருந்து பாலு என்பவர் எனது மாமாவிற்கு தகவல் தெரிவித்து அவர் மூலம் என் தந்தைக்கு தகவல் தெரிவித்தார். என் தந்தைக்கு தகவல் தெரிவித்த என் மாமாவின் பெயர் முனியப்பன். என் தந்தை போலிசில் புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு வந்து விசாரித்தனர். என் மீது மோதியதாக நான் கூறும் இருசக்கர வாகனம் பதிவெண் TN 16 X 3512 இந்த விபத்தில் சம்மந்தபடவில்லை என்றால் சரியல்ல. உங்கள் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 16Y 8242 என்ற splender இருசக்கர வாகனம் என்றால் சரியல்ல. அந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு கிடையாது, பதிவு சான்று கிடையாது அதனால் விபத்து ஏற்பட்டு சுமார் 9 நாட்கள் கழித்து எனக்கு இழப்பீடு பெறவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் விபத்தில் சம்மந்தப்படாத TN 16 X 3512 என்ற வாகனத்தின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உங்கள் மீது மோதிய வாகனம் விபத்தில் சம்மந்தபடவில்லை என்று போலிசார் விசாரணையில் தெரியவந்ததன் பேரில் வழக்கு பிழையுடையது என இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. விபத்திற்கு காரணம் TN 16Y 8242

வாகனம் என்றாலும், உண்மைக்கு புறம்பாக இழப்பீடு பெறுவதற்காக உங்கள் தந்தை தாக்கல் செய்துள்ள இந்த இழப்பீடு கோரும் மனு 2ம் எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை ரூ.15 லட்சம் ஆகும். அந்த தொகையை நீங்கள் பெற தகுதியற்றவர் என்றால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் மருத்துவர்களிடம் விபத்து ஏற்பட்ட விபரத்தை நான் தான் தெரிவித்தேன். சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் உங்கள் மீது கார் மோதிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல இருசக்கர வாகனம் தான் என் மீது மோதியது. நீங்கள் தாக்கல் செய்துள்ள நஷ்டஈடு கோரும் மனுவில் 16எ காலத்தில் ஓட்டுநர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த பெயர் யார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் சம்மந்தபடவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் பொருத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).